செ.வெ.எண். 07/ஜனவரி நாள் : 03.01.2019

# பத்திரிக்கை செய்தி

தருமபுரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இயங்கி வரும் தன்னார்வு பயிலும் வட்டத்தில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ள தொகுதி - 7 (பி) மற்றும் தொகுதி - 8 க்கான இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ளது. இப்பயிற்சி வகுப்புகள் அலுவலக வேலைநாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 04.00 மணி வரையில் நடைபெறவுள்ளது. இப்பயிற்சி வகுப்புகள் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு நடத்தப்படவுள்ளது. இந்த இலவச பயிற்சி வகுப்பில் மாற்றுத் திறனாளிகளும் கலந்து கொண்டு பயன்பெறலாம். இலவச பயிற்சி வகுப்பு 06.01.2019 ஞாயிற்று கிழமை முதல் காலை 11.00 மணிக்கு தருமபுரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் துவங்கப்பட உள்ளது. இந்த இலவச பயிற்சி வகுப்பில் மனுதாரர்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**